பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 28 உ வெள்ளிக்கிழமை (12-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 219

# புலிகளின் நெருக்குப் பிடியில்

# ஆனையிறவு ராணுவ முகாம்

## முதலாம் நாள் தாக்குதலிலேயே பிரதான காவல் தளம் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிகப் பெரிய முகாம்களில் ஒன்றான ஆனையிறவு முகாமை நோக்கி விடுதலைப் புலிகள் பல பகுதிகளினாலும் உக்கிரத் தாக்குதல் நடத்தியவாறு முன்னேறி, முகாமைத் தமது நெருக்குப் பிடிக்குள் கொண்டு வந்திருக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய முதல் நாள் தாக்குதலிலேயே பிரதான காவல் முகாம் ஒன்று புலிகள் வசம் வீழ்ந்தது.

புலிகள் விடாது நடத்தி வரும் பசிலன் மற்றும் மோட்டார் தாக்குதல்களினாலும்—

படையினரின் ஷெல் தாக்குதல்களினாலும் —

ஸ்ரீலங்கா விமானப்படையினர் விடாது நடத்தி வரும் வானத் தாக்குதல்களினாலும் ஆனையிறவுப் பகுதி தொடர்ந்து அதிர்ந்த வண்ணம் இருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதல் திடீரென ஆரம்பமானது.

முகாமின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளாலும் தாக்குதல் நடத்தியவாறு புலிகள் முகாமை நெருங்கினர்.

சில மணி நேரத் தாக்குதலிலேயே தெற்குப் பக்கத்தில் [பரந்தன் பக்கத்தில்]— உப்பளக் கரையோரமாக— உல்லாசப் பயணிகள் விடுதியில் அமைந்திருந்த பிரதான காவல் அரண் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தது.

புலிகளின் கடும் தாக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மோதல் ஆரம்பித்துவிட்டது! ஒத்துழைப்புத் தாருங்கள்!!

### விடுதலைப் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

எல்லோரும் எதிர்பார்த்திருந்த ஆனையிறவு மோதல் இப்போது ஆரம்பமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் போராட்டத்துக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.''

—தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி நேற்று 'புலிகளின் குரல்' வானொலிச் சேவை மூலம் மக்களுக்கு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

போராளிகளுக்கு இரத்த தானம் செய்வது, காயப்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி இறங்க முடியாது! காயமுற்றோர் உள்ளேயே

ஆனையிறவில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி வருவதால், முகாம் பகுதியில் ஹெலிக்கொப்டர்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் சண்டையில் காயமடைந்த படையினர் பலரை மீட்டெடுத்து சிகிச்சை அளிக்க முடியாதுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## இதுவரை நடைபெற்றிராத கடும் மோதல் இப்போது!

### ஸ்ரீலங்கா அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 12

''ஆனையிறவில் தற்போது நடைபெறும் மோதல் இதுவரை நடைபெற்ற சண்டைகளில் மிகக் கடுமையானதாகும்.''

பாதுகாப்பு துணை அமைச்சின் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

''ஆனையிறவு பிரதான இராணுவ முகாமிலிருந்து சுமார் 200 யார் தூரத்தில்

[4-ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா முகாம்களில் ஸ்ரீலங்கா படையினர் குவிப்பு

வவுனியா, ஜூலை 12

தெற்கில் இருந்து வடக்கே வவுனியாப் பகுதி முகாம்களுக்கு பெரும் எண்ணிக்கையான படையினர் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக வாகனங்கள் மூலம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் அங்கு வந்து சேர்ந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

கவச வாகனங்கள், புல்டோசர்கள் மற்றும் கனரக வாகனங்கள் பலவும் வவுனியாவை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மட்டு. நாவிதன்வெளியில் தமிழரின் வீடுகள் தீக்கிரை

மட்டக்களப்பு மாவட்டம், நாவிதன்வெளி கிராமத்துக்குள் வாள், கத்திகளுடன் புகுந்த முஸ்லிம் இளைஞர் குழு அந்தப் பகுதியில் உள்ள தமிழர்களைத் தாக்கினர் என்றும் தமிழருக்குச் சொந்தமான சுமார் 50 வீடுகளைக் கொள்ளையிட்டு, பின்னர் தீக்கிரையாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நற்பிட்டிமுனை, கல்முனை கிராமங்களை சேர்ந்த 50 முஸ்லிம் இளைஞர்களே இராணுவத்தினரின் உதவியுடன் இந்தத் தாக்குதல்களை நடத்தினார்கள்.

இதே வேளை ஆறு தமிழர்கள் முஸ்லிம் குழுவால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். [ஒ-3]

## போராளிகள் களப் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் தொடர்ந்து இடம் பெற்று வரும் சண்டையில் தீரத்துடன் போராடி வரும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளில், சிலர் களப் பலியானதாகத் தெரியவருகிறது. எனினும் அவர்கள் பற்றிய பெயர் விவரங்கள் கிடைக்கவில்லை. [உ]

## கோபுரம் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆனையிறவு இராணுவத்தினரின் பிரதான முகாம் பகுதியிலிருக்கும் தொலைத் தொடர்பு கோபுரத்தின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் பசிலன் தாக்குதலில் சேதமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. (உ)

## முச்சந்தி முரளி



[illegible] நிண்டு முழுசுவினம் ......!

## புலிகளின் முற்றுகைக்குள் ஆயிரம் அரச துருப்புகள்?

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் ஆனையிறவு முகாமுக்குள் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐநூறு துருப்புகள் வரை இருக்கக்கூடும் என நம்பப்படுகின்றது.

அண்மைக காலத்தில் பல தடவைகள் ஹெலிக்கொப்டர்கள் இந்த முகாமிற்குள் தரையிறக்கப்பட்டபோது மேலதிகமான துருப்புகள் குவிக்கப்பட்டிருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. [உ]

## மிக உயரத்தில் பறந்தபடி பொம்மர்கள் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆனையிறவு முகாம் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருக்கு உதவியாக குண்டுகளைப் பொழிந்து வரும் பொம்மர்கள், அவ்ரோ மற்றும் ஹெலிக்கொப்டர்கள் என்பன சுமார் 5 ஆயிரம் அடி உயரத்துக்குக் கீழ் இறங்குவதைத் தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று அஞ்சி மிக உயரத்தில் இருந்தவாறே இவை குண்டுகளை வீசுவதாகவும்—

இவ்வாறு உயரத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகள் இலக்கை அடையாமல் கண்டபடி விழுந்து வெடிப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)

### சங்குப்பிட்டி இறங்குதுறையில்

## பொம்மரைக் கண்டு கடலில் பாய்ந்தவர் மரணம்!

### இருவர் கதி தெரியவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 12

சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதியில் பொம்மர் தாழப் பறந்து வருவதைக் கண்டு கடலில் பாய்ந்த எட்டுப்பேரில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மற்றும் இருவரின் கதி தெரியவில்லை. ஏனைய ஐவர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த கொக்குவிலைச் சேர்ந்த திருநடராசா வரதராசா (வயது 19) என்ற வாலிபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மு. புஸ்பராசா ஆகிய எனது சிமெந்து கூட்டுத் தாபன வர்த்தக வங்கிக்கான காசோலை இல. B 304378868 10 - 07 - 1991 இல் வீரமாகாளி அம்மன் கோவில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். [17448)

### மணமகன் தேவை

யாழ் இந்து 25—32 வயதுக்கிடைப்பட்ட B.Sc. மணப்பெண்கள் நிறைய இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம், மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [17502]

யாழ் இந்து செவ்வாய்க் குற்றமுள்ள பாவம் கூடிய அரசாங்க உத்தியோகப் பெண்ணுக்கு B.Sc. அல்லது அதனோடு ஒத்துவரக் கூடிய 34—41 வயதிற்கிடைப்பட்ட நடுத்தர உத்தியோக மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17450)

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து நெதர்லாந்தில் வேலை செய்யும் 27 வயது டாக்டருக்கும், டென்மார்க்கில் உள்ள குற்றமுள்ள ஆசிரியருக்கும், 30 வயது 7 இல் செவ்வாய் B. Sc. என்ஜினியருக்கும், குற்றமற்ற 32 வயது B.Sc. ஆசிரியருக்கும். 39 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும் மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [17501]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4170)

### பைண்டிங்

உங்களது பெறுமதிமிக்க புத்தகங்கள் மற்றும் தொகுப்புகள் அனைத்தும் மிகவும் அழகான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். கூடுதலாகக் கட்டும் நூலகம், கல்லூரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/0199)

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12 யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது என மாணவரவை அறிவித்துள்ளது. (ஓ)

### காரைநகர் மாணவருக்கான உணவு முத்திரை

காரைநகர் கொத்தணி மாணவர்களுக்கான மார்ச், ஏப்ரல் மாதத்துக்குரிய உணவு முத்திரைகள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வைத்து வழங்கப்படும். [த]

---

உ

## கலக்சி புகைப்பட சேவை

### ★ திறப்பு விழா அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் ஆனி மாதம் 28 ஆம் திகதி (12 - 07 - 1991) இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 12- 03 மணி தொடக்கம் பி. ப. 1-15மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள 337ஆம் இலக்க கட்டடத்தின் முதலாம் மாடியில்

### கலக்சி புகைப்பட சேவை

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்:
**சி. சிவபாலன்**

இல. 3, அன்னசத்திர ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [17447]

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

[BECON]

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 92

பொருளியல்

*S.* வரதராஜன்
B. A. (Hons)

பொருளியல் பகுதி II
வரவு - செலவுத்திட்டம்

**ஆரம்பம் 14 - 07 - 1991**
ஞாயிறு

பிரிவு I — 10 - 00 a. m.
பிரிவு II — 7 - 00 a. m.

(சி/0232)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி அன்னபூரணம் சிவகுரு

தோற்றம்: 10 - 8 - 1913
மறைவு: 23 - 6 - 1990

**திதி: 12 - 7 - 1991**

ஆண்டு பல சென்றாலும் உங்கள் பிரிவுத் துயர் எம்மை விட்டு என்றும் அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

சந்தை முன் ஒழுங்கை,
திருநெல்வேலி. (சி/0233)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சகிலன்

புலோலி தெற்கைச் சேர்ந்த பன்னீர்ச்செல்வம் மரியராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சகிலன் தனது முதலாவது பிறந்த தினத்தை 12-07-1991 இன்று தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர், அக்கா ரஜீதா, பேரன்மார், பேர்த்திமார், மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், ஞானப்பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் நலமுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். [4186]

---

## JUDE FOTO

## யூட் புகைப்படக் கலையகம்

அழகிய முறையில், தெளிவாக
பாஸ்போர்ட், அடையாள அட்டை
மற்றும்
கலர், கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களை
பிடித்துத் தருபவர்கள்

அவசரப் படங்கள் மூன்று மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**முக்கிய அறிவிப்பு:**
முதல் நன்மை பெறும் சிறார்கள் படம் பிடித்துக் கொள்வதற்கு விசேஷ காட்சி அமைப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

51, நாலாம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

(4196)

---

யாழ். மாவட்ட கிராமசேவையாளர் சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்:- யாழ். புனித பரியோவான் கல்லூரி மண்டபம்
காலம்:- 13-07-1991ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 10.00 மணி
தலைவர்:- S S. நடராசா அவர்கள்

எமது சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(17507) —கௌரவ செயலாளர்

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

க. பொ. த. (உ/த) ஆண்டு 11 மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் இன்று 10.00 மணி முதல் நடைபெறவுள்ளன. மேற்படி மாணவர்களும் சகல ஆசிரியர்களும் கல்லூரிக்குச் சமுகம் தரவும்.

—அதிபர்

(C 0236)

---

## முக்கிய அறிவித்தல்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவ மன்றத்தால் நடாத்தப்படும் புதிய மாணவர்கட்கான வரவேற்பு உபசார வைபவம் ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை (13 - 07 - 1991) காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

**வணிக மாணவர் மன்றம்**
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(17505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சாத்தியமாவது எப்படி?

சர்வதேச மன்னிப்புச் சபை, 1991 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில், வழமை போலவே ஸ்ரீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்துக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

தமிழ்ப் பூமியில் பாதுகாப்பற்ற, நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்களை அரச படையினர் அராஜகமாக, அநியாயமாக, சட்டத்துக்குப் புறம்பாக கொலை செய்வது குறித்தும் அறிக்கையில் கணடனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவங்கள் குறித்தும் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் — ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகளில் — வெளிவந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள், பூஸா போன்ற படைத் தடுப்பு முகாம்களில் தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்தும் —

நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்யாமல் அவர்களின் அடிப்படை வசதிகளைத் தானும் வழங்காமல் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டது குறித்துமே — பிரஸ்தாபித்து வந்தன; கண்டித்து வந்தன.

ஆனால் இப்போது...? அவற்றுடன் ஒப்பிடும்போது அப்பாவிப் பொதுமக்களை உயிரோடு எரிக்கும் மிருகத்தனமான அளவுக்கு ஸ்ரீலங்காப் படைகளின் மனித உரிமை மீறல் அசுரத்தனம் மிகுந்ததாகிவிட்டது!

அந்த அசுரத்தனத்தை மன்னிப்புச் சபை எத்தகைய ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினாலும், இலங்கை அரசு அக்கறைப்பட்டதாக இல்லை. கடன் வழங்கும் நாடுகள் காதை முறுக்கத் தொடங்கிய பின்னர் தான், இப்போது — ஒரு சில மாதங்களாக — ஏதோ சிரத்தை எடுப்பதாகக் காட்டிக் கொள்கிறது!

ஆனால் இதுவரை மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டதாகப் படையினர் எவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டதாகவோ, தண்டனை விதிக்கப்பட்டதாகவோ நாம் அறியோம். அது எப்படிச் சாத்தியமாகும்?

படையினர் என்ன அக்கிரமத்தைச் செய்தாலும், அவர்களைப் பாதுகாக்கும் அரண்களாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும், படையினருக்கான குற்றத் தவிர்ப்புச் சட்டமும் இருக்கும் போது, ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் எவ்வாறு தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைத் தடுக்கமுடியும்.

குற்றத் தவிர்ப்பு என்பது மனித உரிமை மீறல்களைச் சக்கரம் போலச் சுற்றிச் சுற்றிக் கொண்டு வந்து குவிக்க வல்லது. குற்றத்தை இழைப்பவர்கள் தம்மை அரசாங்கம் தண்டிக்கமாட்டாது எனத் தெரிந்ததால், மீண்டும் மீண்டும் அதே குற்றத்தை இழைக்கவே செய்வர்!

அந்த இரு சட்டங்களையும் நடைமுறைப்படுத்திக் கொண்டு, ஸ்ரீலங்கா அரசினால் படையினர் நடத்தும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியும் என்றோ அல்லது மக்களின் மனித உரிமைகளைப் பேணமுடியும் என்றோ எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

## காரைநகர் படையினர் ஷெல் தாக்கு

சுழிபுரம், ஜூலை 12

காரைநகர் படையினர் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சுழிபுரம் கடற்கரைப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

அதேசமயம் கடற்பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

[ஓ-28]

## சாவகச்சேரிப் பகுதியை நோக்கி நள்ளிரவில் ஷெல்

சாவகச்சேரி, ஜூலை 12

நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி இராணுவ முகாமில் இருந்து சாவகச்சேரிப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

சங்கத்தானை, கற்குழி, மட்டுவில், கல்வயல், விளை வேலி ஆகிய பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்தன.

நள்ளிரவில் திடீர் என ஷெல்கள் விழுந்து வெடித்தபோது மக்கள் நித்திரையில் இருந்து எழுந்து ஓடி பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டனர்.

உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல் எதுவும் இல்லை. ஷெல்லினால் கிணறு ஒன்று இடிந்தது. மரங்கள் சில முறிந்து விழுந்தன. கால்நடைகள் சில பலியாகின.

(உ-31-117-15)

## விறகு வெட்ட சென்றவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர்

### இருவர் பற்றித் தகவல் இல்லை

நவாலி, ஜூலை 12

கடந்த வாரம் பூநகரிக்கு விறகு வெட்ட வள்ளத்தில் சென்ற நவாலியைச் சேர்ந்த நால்வரில் இருவர் சடலமாக மீட்கப்பட்டனர். மற்ற இருவரின் நிலை தெரியவில்லை.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:

நவாலி தெற்கைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை கந்தசாமி குணசேகரன் (வயது 30), அவரது சகோதரன் க. விஜயன் (வயது 14), 2 பிள்ளைகளின் தந்தை நல்லையா ஜெயரத்தினம் (வயது 28), நவாலி கிழக்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தை க. மாதவராசா (வயது 33) ஆகியோர் கடந்த 5 ஆம் திகதி விறகு வெட்டுவதற்காக வள்ளத்தில் பூநகரிக்குச் சென்றனர்.

அவர்கள் வீடு திரும்புவதாகக் கூறிச்சென்ற 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இடி மின்னலுடன் பலத்த காற்றும் வீசியது.

மறுநாள் திங்கட்கிழமை அவர்கள் வீடு திரும்பாததை அடுத்து அவர்களின் உறவினர்கள் தேடும் பணியில் இறங்கினர். இறுதியில் புலோப்பளைக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் ந. ஜெயரத்தினம், க. மாதவராசா ஆகியோரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மற்ற இருவர் பற்றியும் அவர்கள் பயணம்செய்த வள்ளத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்தும் எதுவும் தெரியவில்லை.

குறிப்பிட்ட தினத்தன்று இரவு கடலில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-100)

## மீனவர் பலி!

கடந்த ஞாயிறன்று சுழிபுரம் மூன்றாம்பிட்டிக் கடலில் மீனவர் படகு ஒன்றை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த புண்ணியர் சின்னத்தம்பி என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவருடன் கூடச் சென்று தொழில் செய்தவர் உயிர்தப்பி, நீந்தி கரைவந்து சேர்ந்தார்.

(உ-28)

## பிலிப்பீன்ஸ் தளத்தை கைவிட அமெரிக்கா முடிவு

பிலிப்பீன்ஸில் உள்ள தமது தளங்களில் மிகப்பெரியதான கிளார்க் தளத்தை கைவிடுவது என்று அமெரிக்கா முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

அண்மையில் பினருபே எரிமலை வெடித்ததைத் தொடர்ந்து இத்தளம் மோசமாக சேதமடைந்தது தெரிந்ததே.

இத்தளத்தை திருத்துவதாயின் அதற்கு 50 கோடி டொலர் செலவிடப்பட வேண்டியிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### சட்டசபையில் இருந்து

## திருநாவுக்கரசு நேற்று வெளியேற்றப்பட்டார்

அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு நேற்று சட்டசபைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

கண்ணியக் குறைவாக சபையில் நடந்து கொண்டார் என்று கூறி சபையில் இருந்து வெளியேறும்படி சபாநாயகர் திருநாவுக்கரசுக்கு உத்தரவிட்டார்.

உத்தரவுக்கு திருநாவுக்கரசு கீழ்ப்படிய மறுத்தார். அதனைத் தொடர்ந்து அவர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

கைக்குட்டையால் தமது வாயைக் கட்டியபடி திருநாவுக்கரசு சபைக்கு சமுகமளித்திருந்ததைத் தொடர்ந்தே இச் சம்பவம் இடம்பெற்றது.

சட்டசபையில் தம்மைப் பேசவிடாமல் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தடுத்து வருவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே தாம் வாயைக் கட்டிக்கொண்டு சென்றதாக பின்னர் செய்தியாளர்களிடம் திருநாவுக்கரசு தெரிவித்தார்.

(உ-எ)

### தென்ஆபிரிக்கா மீதான

## பொருளாதாரத் தடையை அமெரிக்கா தளர்த்தியது

வாஷிங்டன், ஜூலை 12

தென்ஆபிரிக்கா மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா தளர்த்தியுள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடந்த புதன் இரவு செய்தியாளர் மாநாட்டில் இதனை அறிவித்தார்.

நிறவேற்றுமைக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா விதித்த நிபந்தனைகளை தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசு நிறைவேற்றியுள்ளதாக ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

திரு. புஷ் இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஜனாதிபதி புஷ்ஷின் முடிவு, அவசரப்பட்டு எடுக்கப்பட்டதொன்று என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கண்டித்துள்ளது.

அமெரிக்க அரசின் முடிவு பொறுப்பற்ற தன்மையானது என்று அமெரிக்க ஜனநாயகக் கட்சித் தலைவர்களில் ஒருவரான செனட்டர் எட்வர்ட் கென்னடி கண்டித்தார்.

தென்ஆபிரிக்காவில் நிறவேற்றுமைக் கொள்கையை தென்ஆபிரிக்க அரசு முற்றாக் கைவிடுவதற்கு முன்னர் அமெரிக்கா அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளைத் தளர்த்த முன்வந்துள்ளது கண்டிக்கத்தக்கது என்றும் செனட்டர் கென்னடி தெரிவித்தார்.

நிறவேற்றுமையைக் கடைப்பிடிப்பதைக் கண்டித்து தென் ஆபிரிக்கா மீது 1986ஆம் ஆண்டு முதல் பொருளாதாரத் தடையை அமெரிக்கா அமுல் நடத்தி வருகிறது.

(ஒ-எ)

### ஜெத்தாவில்விமானம்நொறுங்கியது

## ஹஜ் யாத்திரிகர்கள் உட்பட 263 பேர் கருகி மரணம்

ஜெத்தா, ஜூலை 12

நைஜீரிய பயணிகள் விமானம் ஒன்று நேற்று சவூதி அரேபியா — ஜெத்தா சர்வதேச விமான நிலையத்தில் நொறுங்கி விழுந்தது.

அதில் பயணஞ் செய்த 263 பேரும் அந்த இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் 248 பேர் முஸ்லிம் யாத்திரிகர்கள் என்றும் எஞ்சிய 15 பேர் விமான சிப்பந்திகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மக்காவில் இருந்து நைஜீரியா திரும்பிக்கொண்டிருந்த [illegible]ந்தவர்கள் ஆவர். ஜெத்தாவில் இருந்து யாத்திரிகர்களுடன் புறப்பட்ட அந்த விமானம் சில நிமிடங்களில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஜெத்தாவுக்கு திரும்பிக்கொண்டிருந்தது. ஜெத்தா விமானநிலையத்தில் தரை இறங்குவதற்கு தயாரான சமயம் அந்த விமானம்நொறுங்கி விழுந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

நைஜீரியன் எயர்வேஸுக்கு சொந்தமான அந்த விமானத்தின் ஒரு ''என்ஜினில்'' தீப்பற்றியதைத் தொடர்ந்து, அது புகை சுக்கியபடி விமான நிலையத்தில் மோதி நொறுங்கியது.

(உ-எ)

## விபத்தில் சிறுவன் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 12

அரியாலை புங்கங்குளம் சந்தியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்து ஒன்றில் 13 வயதுச் சிறுவன் அந்த இடத்திலேயே உயிரிழந்தான்.

அரியாலை கதிரேசன் வீதியைச் சேர்ந்த ஆனந்தராசா ஆனந்த ரூபன் (வயது 13) என்ற சிறுவனே மரணமானவனாவான்.

(ஓ-15)

## கொக்குவில் வாசி கண்டி வாவியில் மூழ்கி மரணம்

கண்டி வாவியில் குளித்துக் கொண்டிருந்த கொக்குவில் வாசி ஒருவர் நீரில் மூழ்கி மரணமானதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கண்டி திரித்துவக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த வேலாயுதம் வினாயகமூர்த்தி [28 வயது] என்னும் இவர் கடந்த ஞாயிறு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-3]

## முகமாலையில் வண்டில்மாடுகள் குண்டுக்குப் பலி

தென்மராட்சி, ஜூலை 12

கண்டி வீதி வழியாக சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றைத் துரத்தி வந்த பொம்மர் நடத்திய தாக்குதலில், இரண்டு வண்டில் மாடுகள் கொல்லப்பட்டன.

கடந்த செவ்வாய் மாலை முகமாலையில் இச்சம்பவம் நடந்தது.

குண்டு ரயில் பாதையில் வீழ்ந்து வெடித்தது.

(இ-117]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று, இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற இருக்கிறது. விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் சகலரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நாளை நடைபெறவிருந்த ''வடபிரதேசத்தின் நிர்வாக மையத்துக்கான இடஅமைவு தெரிவு'' கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## சாரணர்களுக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்களும், திரி சாரணர்களும், சாரணத் தலைவர்களும், சாரண முக்கியஸ்தர்களும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ''பாலம்'' நிறுவனத்தில் கூடுமாறு கோரப்படுகின்றனர்.

(இ)

## நீதிபதி கடத்தப்பட்டார்

பாட்னா, ஜூலை 12

பீஹார் மாநிலத்தில் நீதிவான் திரு. திரிபாதி என்பவர் தீவிரவாதிகள் சிலரால் கடத்திச் செல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த சமயத்தில் அவருடன் கடத்திச் செல்லப்பட்ட இன்னொரு நீதிவான் திரு. பிரசாத் என்பவர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி வைத்திய உத்தியோகத்தர்களை ஆறுமாத கால உள்ளக பயிற்சியில் ஈடுபடுத்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மார்ச் - ஏப்ரல் 90 இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பின்வரும் உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் 15-07-91 தொடக்கம் 6 மாத காலத்திற்கு எனது பிராந்தியத்தில் உள்ளக பயிற்சியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இவர்கள் 15 - 07 - 91 ற்கு முன்னதாக எனது பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

பெயர்

1. செல்வி அலெக்ஸாட்டர் காமெல் சுகன்யா
2. செல்வி தர்மலிங்கம் ஜீவன்ஜானா
3. செல்வி சிவராமலிங்கம் குமுதினி
4. செல்வி சோமலிங்கம் மங்கையர்மணி
5. செல்வி கோபாலபிள்ளை மாலினி
6. செல்வி சுவாம்பிள்ளை மரினா பிறேமினிதேவி
7. செல்வி துரைசிங்கம் பிறேமாதேவி
8. செல்வி கணபதிப்பிள்ளை பத்மநந்தினி
9. செல்வி நடராஜா ராஜலெட்சுமி
10. செல்வி ரட்ணம் சுமதி
11. செல்வி சிவபாலன் வள்ளிரமணி
12. செல்வி ஐயாத்துரை பூவதி
13. திரு. சின்னத்துரை நவரத்தினராஜா

**டாக்டர் ந. கனகசபை,**
**சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

59, விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம். (சி-0235)

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்தில் தலை சிறந்த
லயஞானதிலகம் இணுவையூர்
**N. R. சின்னராஜா அவர்களுக்கு**
வடமராட்சி நாதஸ்வர தவில்
கலைஞர்களின் இதயம் நெகிழ்ந்த
கண்ணீர் அஞ்சலிகள்.

இணுவையூர் சின்னராஜா அண்ணா
ஈழத்துக்கு ஓர் சின்னராஜா அண்ணா
ஈழத்துக்கு ஓர் இசைவேந்தர் அண்ணா
இசைக்கொடி ஏற்றி ஈழத்தை அரசாண்ட அண்ணா
இழந்துவிட்டோம் சின்னராஜா அண்ணாவை.

இங்ஙனம்:
**வடமராட்சி**
**நாதஸ்வர தவில் கலைஞர்கள்.**
[17446]

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

37. செட்டித்தெரு ஒழுங்கையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் நேற்று (11-7-1991) வியாழக்கிழமை காலமானார். இவர் தவபாக்கிய லக்சுமியின் அன்புக் கணவரும், ரவிசங்கர் (தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்), உமாசங்கர் (யாழ் மத்திய கல்லூரி), ரேணுசங்கர் (யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (12-7-91) வெள்ளிக்கிழமை மாலை செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தி. ரவிசங்கர்**

37, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (17270)

### அப்புக்குட்டி சின்னத்துரை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்டவரான அ. சின்னத்துரை 11-7-91 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், நாகபூஷணி, தனபாலசிங்கம் [பிரதேச சபை, முல்லைத்தீவு], குணபாலசிங்கம் [நீர்ப்பாசன இலாகா, முருங்கன்], கனகசிங்கம் [ஜேர்மனி], செல்வரத்தினம் [நீர்ப்பாசன இலாகா, வவுனியா], சறோஜினிதேவி [ஜேர்மனி], பத்மாதேவி. குலரட்ணம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவன், திரிபுரசுந்தரி, லதா, முத்துலிங்கம், மகாசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 12-7-91 [இன்று] வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**சி. தனபாலசிங்கம்**

''தணிகை''
அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (17269)

## வெங்கட்ராமன் கருத்து

புதுடில்லி, ஜூலை 12

இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீரவு ஒன்றைக் காணும் முயற்சி தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வெங்கட்ராமன் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று பேசுகையில் தெரிவித்தார். (அ-எ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆனையிறவு இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் நடந்த நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகளான இரண்டாம் லெப்டினன்ட் சுதன் (செபமாலை யேசுதாஸன் — மன்னார், வீரவேங்கை லோ (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் — ஒட்டுசுட்டான்) ஆகியோரும்—

நேற்று நடந்த மோதலில் ரமேஷ் (தம்பித்துரை முத்துக்குமார் — இளவாலை) என்பவரும் வீரமரணம் அடைந்தனர். [ஓ]

## பஞ்சாபில் 11 படையினர் பலி

புதுடில்லி, ஜூலை 12

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டனர்.

## எல்லையில் கூடுதல் படை

மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப்புறக் கிராமங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக கூடுதல் இராணுவத்தினர் அனுப்பி வைகசப்பட்டுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

## இதுவரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனையிறவு முகாமை ஒரேயடியாகத் தகர்த்தெறியும் நோக்கில் விடுதலைப் புலிகள் அதிகமான வெடிமருந்துகளுடன் டிராக்டர்கள் மற்றும் புல்டோசர்கள் ஆகியவற்றை ஆனையிறவு முகாமுக்கு வெளியே நிறுத்தியுள்ளனர்.

முகாமை விடுதலைப் புலிகள் பிடித்துவிடக்கூடாது என்பதற்காக இராணுவம் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறது '' — இப்படி அவர் மேலும் கூறினார். (உ-எ)

## மோதல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட போராளிகளைப் பராமரிப்பது. அவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான மெத்தைகள், மெத்தை விரிப்புகள், உணவு ஆகியவற்றை வழங்குவது ஆகிய உதவிகளை மக்கள் தாமாக முன்வந்து செய்ய வேண்டும்; எமது போராளிகள் கேட்கும் போது ஒத்துழைப்புத் தரவேண்டும்.

வீதிப் போக்குவரத்துக்கும் மக்கள் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். காயமடைந்த போராளிகளை ஏற்றிவரவோ அல்லது களத்துக்கு போராளிகளை அல்லது ஆயுதங்களை கொண்டு செல்லவோ வசதியாக முக்கிய வீதிகள் பாவிக்கப்படலாம்.

ஆகவே மக்கள் முக்கிய வீதிகள் வழியாக போக்குவரத்தில் ஈடுபடுவதையும், கூடி நிற்பதையும், விடுப்பு பார்ப்பதையும், கதைத்தபடி சைக்கிளில் செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக மாலை ஆறு மணிக்குப் பின்னர் அவசர தேவை இருந்தால் ஒழிய வீட்டை விட்டு வெளியேறாமல் வீட்டுக்குள் இருந்து மக்கள் எமக்குப் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும். — இப்படி அவர் கோரிக்கை விடுத்தார். [உ]

# தனங்கிளப்பில் 2 சடலங்கள்

கைதடி, ஜூலை 12

தனங்களப்பு கடற்கரையில் நேற்று நண்பகல் இரு சடலங்கள் கரையொதுங்கின.

நேற்று முன்தினம் கௌதாரிமுனையில் நடந்த படகு விபத்து ஒன்றின்போது காணாமற்போன இருவரது சடலங்களே இவை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சடலங்களில் ஒன்று பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த சின்னத்தம்பி கணேசையா என்று அடையாளம் காணப்பட்டது.

மற்றைய சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்கவரான இவரது சடலம் வெளிர் நீல நிற சேர்ட்டுடன் காணப்பட்டது. [ஓ-74]

# மகராஷ்டிர மாநிலத்திலும் சீக்கிய தீவிரவாதிகள் தாக்கு

## மந்திரி சவானின் மகள் தப்பினார்

பம்பாய், ஜூலை 12

மகராஷ்டிர மாநிலத்தில் இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானின் வீட்டை சீக்கியத் தீவிரவாதிகள் நேற்றுத் தாக்கினர்.

சம்பவம் நடந்த சமயம் வீட்டில் தங்கியிருந்த சவானின் மகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சீக்கியத் தீவிரவாதிகள் மகராஷ்டிரா வரைவந்து தாக்குதல் நடத்தியிருப்பது அந்த மாநில அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-எ]

# காங்கிரஸ் அரசின் தலைவிதி இன்று தெரியும்

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு நம்பிக்கை கோரும் பிரேரணையை இன்று வெள்ளிக்கிழமை லோகசபையில் சமர்ப்பிக்கவிருக்கிறது.

பிரதமர் நரசிம்மராவ் பதவியேற்ற போது, அவரது அரசுக்குள்ள பெரும்பான்மையை அடுத்த நான்கு வாரங்களுக்குள் நிரூபிக்கும்படி ஜனாதிபதி வெங்கட்ராமன் கேட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

தற்போதைய லோகசபையில் இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு 247 எம். பிக்களின் ஆதரவு உண்டு. [இ.எ]

# இராணுவ சீருடையில் மலையகத்தில் கொள்ளை

கொழும்பு, ஜூலை 12

மலையகத் தோட்டங்களில் இராணுவச் சீருடை தரித்தோர் ஆயுதங்களுடன் சென்று கொள்ளை அடித்து வருகின்றனர்.

பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்காவிடம் இது பற்றி முறையிடப்பட்டுள்ளது.

கைத்தொழில் துணை அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி இம்முறைப்பாட்டைச் செய்திருக்கின்றார். [இ-எ]

# ஜே. வி. பியினர் பறித்த 8 லட்சம் அடையாள அட்டைகள்

கொழும்பு, ஜூலை 12

தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின்போது பொதுமக்களிடமிருந்து சுமார் 8 லட்சம் தேசிய அடையாள அட்டைகளை ஜே. வி. பியினர் அபகரித்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அப்படி பறிகொடுத்த பொதுமக்களின் புதிய அட்டைக்கான விண்ணப்பங்கள் நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் வீதம் ஆட் பதிவுத் திணைக்களத்துக்கு கிடைப்பதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (இ - எ)

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்தக் காவல் அரணிலிருந்தபடையினர் நிலைகுலைந்து, பின்வாங்கி பிரதான முகாம் நோக்கி ஓடித் தப்பினர்.

உயிரிழந்த படையினரின் சடலங்களையும், காயமடைந்த சிப்பாய்களையும் அவர்கள் தூக்கிக் கொண்டு ஓடியதாகவும்—

அவர்கள் கைவிட்டு சென்ற பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் தெரியவருகிறது.

இதே வேளை முகாமின் வடக்குப் புறத்தில் (குறிஞ்சாத்தீவுப் பக்கம்) உள்ள காவல் முகாம் மீதும் புலிகள் நெருக்கித் தாக்குதல் தொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

நேற்றிரவு இச் செய்தி எழுதப்பட்டுக்கொண்டிருந்த போது முகாம் பகுதியில் தொடர்ந்து குண்டு வெடிப்பு முழக்கங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

யுத்த முனையில் நேற்று மாலை இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விரிவான தகவல்கள் இச்செய்தி எழுதப்படும் வரை உதயன் பணிமனைக்குக் கிடைக்கவில்லை. [உ-3-5-15]

## முகாம் பகுதியில் ஒளி பிரகாசம்

ஆனையிறவு முகாம் பகுதி இரவு வேளையில் பிரகாசமாகக் காட்சியளித்த வண்ணம் இருந்ததாகத் தெரிய வருகிறது.

படையினர் அடுத்தடுத்து ஏவும் ''பரா'' வெளிச்சக குண்டுகள் ஒரு புறமும், இருதரப்பினரும் மேற்கொள்ளும ஷெல், பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களினாலும் இப்பகுதி எங்கும் ஒரே பிரகாசமாகக் காட்சியளிக்கிறதாம். (ஓ)

## முடிவு திகதி ஆகஸ்ட் 8

முதலாம் தர மற்றும் இரண்டாம் தர பாடசாலை அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி எதிர்வரும் ஆகஸ்ட் 8 ஆம் திகதி என்று கல்விச்சேவைகள் கமிட்டி அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org